எங் குடி மானத்த வாங்குறான் பாரன்" என்று சொல்லி குமாரின் அம்மா தரையோடுதரையாகிக் கிடந்த அவனுடைய கால்களைப் பிடித்து வளையிலிருக்கும் நண்டைப் பிடித்து இழுப்பது மாதிரி வெளியே இழுக்க, உள்ளே இருந்த பெண் கைகளைப் பிடித்து உள்ளே இழுக்க வீறிட ஆரம்பித்தான் குமார். உள்ளே இருந்த பெண் இழுப்பதை விட்டுவிட்டு அவசரமாக எழுந்து நின்று படலுக்கு வெளியே பார்த்தாள். கம்சலா குமாரை வெளியே இழுத்து தூக்கி நிறுத்தி அவனுடைய முகத்திலேயே அறைந்துகொண்டிருப்பதைப் பார்த்ததும் பதறிப்போய் "வெளயாட்டுப் புள்ளெதான. என்னாத்த கண்டுது. ஆள இப்பிடி தள்ளிவுடு" என்று சொன்னாள். அவள் சொன்னதைக் காதில் வாங்காத கம்சலா குமாரை அடித்து இழுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள். திரும்பிப் பந்தலைப் பார்த்தான் குமார். கண்ணனையும் கணேசனையும் காணாததால் அழ ஆரம்பித்தான்.

இரண்டு தெரு தாண்டி வந்த பிறகும் அடிப்பதை கம்சலா நிறுத்தவில்லை. "நம்பளுக்கும் அந்த ஊட்டுக்கும்தான் மொறப்பாடாச்சே. அங்க எதுக்குப் போன இனிமே போவியா?" என்று கேட்டு அடித்துக்கொண்டிருந்தவளின் அடியைத் தாங்க முடியாமல் வலுக்கட்டாயமாக அவனுடையப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட குமார், அவனுக்கு சிறிது தள்ளி நேரெதிராக நின்றுகொண்டு எதிராளியிடம் பேசுவது மாதிரி முகத்தைக் கோணிக்கொண்டு சொன்னான்:

"இனிமே என்னெ அடிச்சா, உனக்கு சாவம் கொடுத்துடுவன்."
கம்சலா அப்படியே திகைத்துப்போய் கல்தூணாய் நின்றுவிட்டாள். ஆச்சரியத்தில் அவளுடைய முகம் விரிந்தது. கோபக் குறி குறைய ஆரம்பித்தது. குமார் சொன்னதை சரியாகக் காதில் வாங்காதவள் மாதிரி "என்னடா சொன்ன, என்னடா சொன்ன?" என்று திரும்பத்திரும்ப கேட்டவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. சிறுபெண் மாதிரி கடகடவென்று சத்தம்போட்டுச் சிரித்தாள். அதே கேள்வியை மீண்டும்மீண்டும் கேட்டாள். எல்லாவற்றையும் மறந்துவிட்டு சிரித்துக்கொண்டிருந்தாள். அவள் எட்டிப் பிடிக்காத அளவுக்குத் தூரமாக நகர்ந்து நின்றுகொண்டு குமார் சொன்னான்: "எதுத்த ஊட்டுப் பொம்பள நம்ப ஊட்டு ஆட்டுக்குட்டிய அடிச்சிக் கால ஒடச்சப்ப, அவ சீக்கிரம் சாவணும்னு நீ அய்யனார்கிட்டெ வேண்டுனெல்ல, மண்ணாப்போவணும்னு சாவம் கொடுத்தெல்ல; அந்தமாரிதான்."